**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி-**

1) எதிரி எனக்கு கொடுத்த காசோலை கனரா வங்கி, அந்தியூர் கிளையை சேர்ந்த காசோலை எண்.765579 என்றால் சரிதான். எதிரி கொடுத்த காசோலை வசூலாகாமல் திருப்பப்பட்ட விவரத்தை எனது ம.சா.ஆ.4 வழக்கறிஞர் அறிவிப்பின் மூலமாகதான் எதிரிக்கு தெரிய படுத்தினேன் என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பை எதிரியினுடைய வீட்டு முகவரிக்கும், அவர் ஆசிரியராக பணிபுரியும் பள்ளிக்கும் அனுப்பினேன். இரண்டு அறிவிப்பையும் எதிரி பெற்று கொண்டார். நான் சொல்வது தவறு என்றாலும், பள்ளியின் முகவரிக்கு அனுப்பிய அறிவிப்பை மட்டும்தான் எதிரி பெற்று கொண்டார் என்றாலும், வீட்டு முகவரிக்கு சார்வாகவில்லை என்றாலும் சரியல்ல. ம.சா.ஆ.4 அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள அதே முகவரியைதான் புகார் மனுவிலும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் எதிரியின் வீட்டு முகவரியாக குறிப்பிட்டுள்ள முகவரி எதிரியினுடைய முகவரி இல்லை என்றாலும், அந்த முகவரியில் எதிரி குடியிருக்கவில்லை என்றாலும் சரியல்ல.

2) ம.சா.ஆ.6 திருப்பப்பட்ட அஞ்சல் உறையில் No such person என்கிற குறிப்புடன் திருப்பப்பட்டுள்ளதென்றால் சரிதான். மேற்படி ம.சா.ஆ.6 திருப்பப்பட்ட அஞ்சல் உறையில் கண்டுள்ள முகவரி எதிரியின் சகோதரியின் முகவரி என்றால் சரியல்ல, அந்த முகவரியைதான் எதிரி கொடுத்தார். கவுந்தபாடி சலங்கைபாளையத்தை சேர்ந்த ரவிக்குமார் என்பவரின் மகன் ஆர்.யுவராஜ் என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நானும், யுவராஜ் என்பவரும் சேர்ந்துதான் எதிரியின் மீது பொய்யான தகவல்களை சொல்லி துர்லாபம் பெறவேண்டும் என்ற நோக்கத்தில் எதிரியின் காசோலையை எடுத்து பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. யுவராஜ் என்பவரை யார் என்றே எனக்கு தெரியாது. எதிரி வழக்கு காசோலையை அதில் சொல்லபட்டுள்ள தேதியில் எனது வீட்டில் வைத்து நிரப்பி கையொப்பம் செய்து கொடுத்தார் என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.

3) இந்த காசோலையை உள்ளிட்ட கனரா வங்கியின் வழக்கு காசோலை சீரியலில் உள்ள காசோலைகள் மற்றும் இந்தியன் ஓவர்சிஸ் வங்கி, குருவரெட்டியூர் கிளை காசோலைகள் மற்றும் இருசக்கர வாகனத்தின் பதிவு சான்றிதழ் ஆகியவற்றை கொண்ட பையினை 2019ம் ஆண்டே ஈரோட்டிலிருந்து பள்ளிக்கு அவரது இருசக்கர வாகனத்தில் செல்லும்போது எதிரி தொலைத்துவிட்டார் என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக 2019ம் ஆண்டே அம்மாபேட்டை காவல்நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேலும் சம்மந்தபட்ட இரண்டு வங்கிகளிலும் மேற்படி காசோலை சம்மந்தமாக பரிவர்த்தனையை நிறுத்தும்படி மனு கொடுத்து அவரது அந்த காசோலைகள் (Stop payment) நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த சூழ்நிலையில் நானோ, யுவராஜோ அல்லது எங்களுடன் சம்மந்தபட்டவேறு நபரோ மேற்படி காசோலைகளை எடுத்து தவறாக பயன்படுத்தி உள்ளோம் என்றால் சரியல்ல.

4) மேற்படி காசோலைகளை வைத்து எதிரி எங்கு பணிபுரிகிறார் என்று தெரிந்து கொண்டு அதனை மோசடியாக நிரப்பி இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையாகவே அவர் ரூ.3 இலட்சம் என்னிடம் எதிரி கடன் கேட்டு நான் கொடுத்திருந்தால் வட்டி கணக்கிட்டுதான் காசோலை வாங்கியிருப்பேன் என்றாலும், கைமாற்று கடனாக கொடுத்தேன் என்று சொல்வது வழக்கிற்காக சொல்லும் பொய் என்றாலும் சரியல்ல. உண்மையிலேயே எதிரிக்கு நான் கடன் கொடுத்திருந்தால் காசோலை திருப்பப்பட்ட விவரத்தை எதிரிக்கு நேரடியாகவோ அல்லது போன் மூலமாகவோ தொடர்பு கொண்டு அதுபற்றி விளக்கம் கேட்டிருப்பேன் என்றால் சரியல்ல. மேலும், அவரது வீட்டு முகவரிக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பானது திருப்பப்பட்டவுடன், அவரை சந்தித்து கேட்டு அவரது உண்மையான முகவரியை தெரிந்து கொண்டு புகார் மனுவில் குறிப்பிட்டிருப்பேன் என்றால் சரியல்ல, எதிரியை அவரது செல்போனில் தொடர்புகொண்டபோது அவர் போனை எடுக்கவில்லை.

5) எதிரி போனை எடுக்கவில்லை என்று சொல்வது பொய் என்றாலும், எதிரி உண்மையான முகவரி தெரிந்திருந்தால் அவரது வீட்டிற்கோ அல்லது பள்ளிக்கோ சென்று கேட்டிருப்பேன் என்றால் சரியல்ல. என்னுடைய உண்மையான நோக்கமே எதிரி அரசு பள்ளியில் பணிபுரிவதால் அவரை மிரட்டியோ அல்லது சமாதானத்திற்கு வரவைத்தோ பணத்தை பறிக்கவேண்டும் என்கிற நோக்கத்தில்தான் இந்த மோசடியான வழக்கை அவர் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நானாக ஒரு தேதியையும் தொகையையும் குறிப்பிட்டு வங்கியில் தாக்கல் செய்ததாகவும், எதிரி ஏற்கனவே வழக்கு காசோலை உள்ளிட்ட மற்ற காசோலையை பொறுத்து பண பரிவர்த்தனை நிறுத்தம் (Stop Payment) செய்துள்ளதால் காசோலை திருப்பப்பட்டுள்ளதென்றால் சரியல்ல. எனவே, எதிரி காசோலை மோசடி எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6) உண்மையிலேயே நான் தான் எதிரியின் காசோலைகளை நானாகவோ அல்லது மற்றவர்கள் மூலமாகவோ எடுத்து மோசடி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்மீது எதிரி சட்டப்படியான நடவடிக்கை எடுக்க உள்ளார் என்றால் அதனை சந்திக்க தயார். அதனால் எதிரி மீது நான் தாக்கல் செய்துள்ள இவ்வழக்கானது தள்ளுபடி செய்யபடவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**